**இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் பிரகாரம் அரசாங்க மானியங்கள் சபையின் பிரதான வருமான மூலமாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 5,778,569 அல்லது 08 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதே போன்று மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செலவினம் ரூபா 5,778,569 அல்லது 08 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மீளாய்வாண்டிற்கான மொத்த செலவினத்தில் 69 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 52,907,286 கூட்டுமொத்தமான பதவியணியினர் கிரயம் மற்றும் கட்டிட வாடகை முன்னைய ஆண்டின் மொத்த செலவினத்தின் 68 சதவீதத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்திருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| விடயம் | ஆண்டிற்கானது | | அதிகரிப்பு/ (குறைவு) | |
|---|---|---|---|---|
| | 2022 | 2021 | ரூபா | % |
| | ரூபா | ரூபா | | |
| மொத்த செலவினம் | 77,015,260 | 71,236,691 | 5,778,569 | 08 |
| - பதவியணியினர் கிரயம்<br>- கட்டிட வாடகை | 52,907,286 | 48,358,393 | | |
| மொத்த செலவினத்தின் சதவீதம் (%) | 69 | 68 | | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் செயலாற்றல்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1995 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் 1,671 நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட வணிக நிறுவனங்களாக (SBEs) இனங்காணப்பட்டன. எனினும் சபையானது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 550 நிதிக்கூற்றுக்களின் திட்டமிடப்பட்ட மதிப்பாய்வுகளுக்கு எதிராக முறையே 552 மற்றும் 541 நிதிக்கூற்றுத் தொகுதிகளின் மதிப்பாய்வுகளை பூர்த்தி செய்திருந்தது. நிதிக்கூற்றுக்களின் திட்டமிடப்பட்ட மற்றும் உண்மையான மதிப்பாய்வுகள் குறைவடைவதற்குக் காரணம் சபையின் தொழில்நுட்ப பதவியணியினரின் கிடைப்பனவு தொடர்ச்சியாக குறைவடைந்தமை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த இலக்குகள் கிடைக்கக்கூடிய ஆதாரங்களுடன் உகந்த மட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. சம்பளப் பிரச்சனை தீர்க்கப்படாததால் செயலாற்றல் குறைவடைந்து வருகின்றமையை SLAASMB பல ஆண்டுகளாக அமைச்சிற்கு தெரிவித்துள்ளது. ஆனால், சம்பள விடயத்தில் நாளதுவரை எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களின் மதிப்பாய்வுகளின் எண்ணிக்கையை மேம்படுத்துதல் வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களில் தாமதங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அலுவலக வளாகத்தின் உட்புற வேலைகளை வடிவமைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகியவற்றிற்கான ஆலோசனை சேவைகளுக்கான மொத்த நிர்மாணக் கிரயத்தில் 7 சதவீத | SEC உடனான புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் கைச்சாத்திட்டதன் விளைவாக 2019 இல் கேள்விகள் கோரப்பட்டன. எனினும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் உள்ள ஆவணக் | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் பணிகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தில் 2019 சனவரி 30 இல் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் சபை உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது. 2021 ஒக்தோபர் 27 இல் நிர்மாண அபிவிருத்திக் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, ஆலோசனை விலைப்பட்டியலில் இருந்து 65 சதவீதம் அறவிடப்பட்டது. எனினும், கணக்காய்வு திகதியான 2023 மே 25 வரையிலும் ஆலோசனையின் மிகுதி வேலை கட்டம் அல்லது வளாகத்தின் முன்மொழியப்பட்ட மேம்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் காரணமாக பெறப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்பட்டன, மேலும் 5/2019 தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை மூலம் 2019 இல் அமைச்சால் மூலதன செலவினம் குறைக்கப்பட்டதால் உள்ளக நிர்மாண பணியின் செயன்முன்னேற்றம் மேலும் தாமதமாகியது.<br><br>2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், SEC மீண்டும் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டதன் மூலம் உள்ளக வடிவமைப்பு பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. விரிவான தரைத் திட்டத்தை இறுதி செய்தமை மற்றும் பிரிவினையிடுதல் பணியின் நிர்மாண கிரயத்தை பகுப்பாய்வு செய்தமை மற்றும் குத்தகையின் தொடர்ச்சியை ஆண்டின் போது உறுதிசெய்தமை ஆகியவற்றின் விளைவாக SLAASMB இந்த ஆண்டிலும் பிரிவினையிடுதல் பணிக்கான கேள்விகளை கோரியிருந்தது. எனினும், பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் மதிப்பிடப்பட்ட போது 2/2021 மற்றும் 3/2021 தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 4/2022 பொது முயற்சிகள் சுற்றறிக்கை ஆகியவற்றின் மூலமும் 2021 இல் அரசாங்கங்கள் மூலதனச் செலவினங்களைக் குறைத்ததால், SLAASMB வளாகத்தை கொள்வனவு செய்த பின்னர் இரண்டாவது முறையாக உள்ளக நிர்மாணப் பணிகளை நிறுத்தச் செய்தது. | வேண்டும். |
| (ஆ) | சபைகள் 2021 ஆம் ஆண்டில் முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) வடிவமைத்து அமுல்ப்படுத்தத் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 20,158,000 செலவிடப்பட்டது. இது விரிவான மென்பொருள் தொழில்நுட்ப ஆவணப்படுத்தல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை (ICTA), ஆலோசகர்கள், தங்கள் Lanka Government Cloud (LGC 2.0) இல் இந்த முறைமையை இலவசமாக வழங்குவதற்கு இணங்கியிருந்தது. LGC 2.0 வளப் பயன்பாடு | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் பணிகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(DSTD), சோதனைத் திட்டத்தைத் தயாரித்தல், பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை (UAT) அளவுகோல் ஆவணத்தைத் தயாரித்தல் மற்றும் MIS இன் முக்கியமல்லாத தொகுதிகள் தொடர்பான வெளியேறல்கள் (sign offs) போன்ற பணிகளை மாத்திரமே பூர்த்தி செய்திருந்தது. எனினும் முறைமையை செயற்படுத்துதல் செயன்முறையில் தாமதம் காரணமாக 2023 மே இறுதி வரை செயற்பாட்டை மதிப்பாய்வு செய்வதன் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக அதைப் பயன்படுத்த முடியவில்லை.

அதிகபட்சமாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவர்கள் தங்கள் வளங்களை விரிவுபடுத்தும் நிலையில் இல்லாததாலும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் MIS ஐ வழங்கும் நோக்கத்திற்காக வசதியை வழங்க இயலாமை பற்றி அவர்கள் தொடர்ந்து தெரிவித்தனர். எனினும், 3 மாதங்கள் கடந்த பின்னர் கோரப்பட்ட LGC 2.0 இயங்குதளத்தை வழங்குவதற்கு ICTA இணங்கியிருந்தது.

அதன் பிரகாரம் குறித்த 3 மாத காலப்பகுதியின் போது மென்பொருள் உருவாக்குநர் SLAASMB செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பதவியணியினரை ஏனைய சில செயற்திட்டங்களுக்கு பணிக்கமர்த்தினதுடன் ICTA இடமிருந்து LGC வசதியைப் பெற்ற பின்னர் அத்தகைய பதவியணியினர் தற்போது இரண்டு செயற்திட்டங்களிலும் ஒரே நேரத்தில் பணிபுரியும் பதவியணியினருடன் SLAASMB MIS செயற்திட்டத்திற்கு மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டனர்.

மேலும், உருவாக்குநர் வழங்கிய விளக்கங்களின் பிரகாரம் SLAASMB இன் MIS இல் உள்ள தனித்தன்மை மற்றும் சிக்கலான தன்மை காரணமாக, RFP இன் போது ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட காலத்தை விட கால அட்டவணை அதிகமாக உள்ளது, இது முதலில் திட்டமிடப்பட்ட கால எல்லையை விஞ்சி செயற்திட்டக் காலப்பகுதி இருப்பதற்கும் ஒரு காரணமாகும்.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 17 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் 15 வெற்றிடங்கள் நிறைவேற்று மட்டத்தில் இருந்தன, அவை சபையின் முக்கிய செயற்பாடுகளைப் பாதிக்கின்றன. | பட்டயக் கணக்காளர்களுக்கு அரசாங்கத்தின் சம்பள அளவுத்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட குறைந்த சம்பளங்கள் காரணமாக திறமையான பதவியணியினரை SLAASMB தக்கவைத்துக் கொள்ளத் தவறியிருந்தது.<br><br>2021 யூன் 21 இல் அமைச்சரவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு தொழில்நுட்ப ரீதியாக திறமையான பட்டயக் கணக்காளர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்கும் SLAASMB ஐ செயற்படுத்துவதற்கு சம்பள அளவுத்திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்திருந்தது. எனினும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (MSD) இணக்கப்பாட்டுடன் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் (SoR) ஏற்றுக்கொள்ளப்படுவதை குறித்த அமைச்சரவை தீர்மானம் தேவைப்படுத்தியது. மேலும் MSD குறித்த அமைச்சரவை தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளங்களுக்கு ஆதரவாக இருக்காததுடன் தற்போது சம்பளமானது அரசாங்க சம்பளத்துடன் சீரமைப்பதற்கு கீழ்நோக்கி திருத்தப்படும் செயன்முறையில் உள்ளது. | அங்கீகாரங்களுடன் உரிய பதவியணியினர்களை உடனடியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் நாயகம் பதவி ஒப்பந்த அடிப்படையில் இருந்தது. எனவே, நிரந்தரப் பணிப்பாளர் நாயகம் இல்லாதமை சபையின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கும். | 2020 ஆம் ஆண்டில் DG ஐ ஆட்சேர்ப்பு செய்யும் போது, சம்பள அளவுத்திட்டத்தை திருத்துவது குறித்து திறைசேரி செயலாளருடன் கலந்துரையாடப்பட்டு, விரைவில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன் பிரகாரம் திருத்தப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தை இறுதி செய்யும் வரை தற்காலிக காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் DG ஐ நியமிப்பதற்கு சபை முடிவு செய்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தற்போது நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்ற அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற சம்பள அளவுத்திட்டத்தை இறுதி செய்வதுடன் இந்த விடயம் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் பிரதி/ உதவி பணிப்பாளர் (சட்டம்) பதவிநிலையொன்று காணப்பட்ட போதிலும் சபை தொடங்கப்பட்டதில் இருந்து அது வெற்றிடமாகவே இருந்தது. | பதவிநிலைகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதைத் தொடர்வதற்கு உதவி பணிப்பாளர்கள் SoRs முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உதவி பணிப்பாளர் தொழில்நுட்பத்திற்கான திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கான (SoR) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு 2023 மே மாத இறுதி வரையிலும் பெறப்படவில்லை. | SLAASMB இன் நெருக்கமான பின்தொடர்தல் காணப்பட்ட போதிலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் SOR ஐ அங்கீகரித்திருக்கவில்லை. | செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |